NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 9 November 2022

# தரவரிசைப் பட்டியலில் சரிந்த என்யுஎஸ், என்டியு

கடந்த நான்கு ஆண்டுகளில் ஆசியாவில் ஆண்டுதோறும் கியூஎஸ் பட்டியல் தரவரிசையில் முதல் இடத்தைப் பிடித்த சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் (என்யுஎஸ்) இந்த ஆண்டு, இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

செவ்வாயன்று வெளியிடப்பட்ட ஆசியாவின் பல்கலைக்கழகங்களின் தரவரிசைப் பட்டியலில், சீனாவின் பீக்கிங் பல்கலைக்கழகம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. சீனாவின் சிங்குவா பல்கலைக்கழகம் மூன்றாவது இடத்தையும், ஹாங்காங் பல்கலைக்கழகம் நான்காவது இடத்தையும் பிடித்துள்ளன.

இதில், ஆசியாவின் சிறந்த பல்கலைக்கழகங்களை தரவரிசைப்படுத்தும் வேறொரு பட்டியலில் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் (என்டியு) ஐந்தாவது இடத்திற்குத் தள்ளப்பட்டது.

கடந்த ஆண்டு பட்டியலின்படி ஹாங்காங் பல்கலைக்கழகத்துடன் இணைந்து என்டியு மூன்றாவது இடத்தைப் பிடித்திருந்தது. இந்நிலையில் முனைவர் பட்டம் பெற்ற கல்வியாளர்களைக் கொண்ட பல்கலைக்கழகங்களின் பட்டியலின் படி முதல் நூறு பல்கலைக்கழகங்களின் வரிசையில் சிங்கப்பூர் பல்கலைக்கழகங்கள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு சிறிய சரிவு இருந்தபோதிலும், சிங்கப்பூரின் இரண்டு முன்னணி பல்கலைக்கழகங்களும் ஆசியாவின் முதல் ஐந்து இடங்களில் உள்ளன என்று கியூஎஸ் துணைத் தலைவர் பாராட்டியுள்ளார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.